# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ).

*************

முறையீட்டு மனு எண்: 0139/2017/ந

ஆணை எண்: 180/2017

நாள்: 5/07/2017

திரு. கு. குணசேகரன்,
5/201, ஆசிரியர் குடியிருப்பு மேற்கு,
மோகனூர் ரோடு, நாமக்கல் – 637 001. — முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நாமக்கல் நகராட்சி, நாமக்கல். — எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. குணசேரன் என்பவரது 22.06.2017 நாளிட்ட முறையீட்டு மனு 23.06.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0139/17 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி மனுவில், 31.01.2009ல் நாமக்கல் நகராட்சி வருவாய் உதவியாளராக ஒய்வு பெற்ற தனக்கு, ஓய்வூதியப் பணிப்பலனிலிருந்து தணிக்கைத் தடையினைக் கருதி ரூ.19,745/- பிடித்தம் செய்யப்பட்டதை வட்டியுடன் திரும்ப வழங்க ஆணையிடக் கோரப்பட்டுள்ளது. மேலும், அதே போன்ற தணிக்கைத் தடை நிலுவையிலிருந்த இருவரை உயர் மட்டக் குழு பரிசீலனையில் தடை நீக்கம் செய்து விடுவித்துள்ளதையும் மனுதாரர் ஆட்சேபித்துள்ளார்.

மனுதாரரது மேற்படி இரு கோரிக்கைகளும் பணியமைப்பு தொடர்பானவையாகும். மேலும், இக்கோரிக்கைகள் தொடர்பாக மனுதாரர் மாண்பமை, சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணைகள் W.P.No.16470/11 மற்றும் W.P.No.16471/11 தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)ன்படி நீதிமன்றமொன்றின் முன் நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்குட்படுத்திட இயலாது. எனவே, இம்முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவ பரிசீலனை/விசாரணைக்கு ஏற்புடையதல்ல எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

7/7/17

<u>பெறுநர்</u>

1. திரு. கு. குணசேகரன்,
   5/201, ஆசிரியர் குடியிருப்பு மேற்கு,
   மோகனூர் ரோடு, நாமக்கல் – 637 001.

2. நகராட்சி ஆணையர்,
   நாமக்கல் நகராட்சி, நாமக்கல்.